மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இந்த மசோதா நிறைவேற்றப்படமென்று கோருகிறேன்.

தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்பட்டு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதா (ச.பே. மசோதா எண் 5/68).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை இப்பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

11. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(iii) 1968-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள்—ஊராட்சிகள் (திருத்த) மசோதா (ச.பே. மசோதா எண் 5/68).

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1968-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, மாவட்ட நகராட்சிகள், ஊராட்சிகள் (திருத்த) மசோதாவை* (சட்டப் பேரவை மசோதா எண். 5/68) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

உள்ளாட்சி மன்றங்களுக்குப் பொருந்துகிற சட்டங்களின் தற்போதைய விதித் துறைகளின்படி, அதாவது 1919-ம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920-ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1958-ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் ஆகிய இச் சட்டங்களின் விதித் துறைகளின்படி, தமிழ்நாட்டுச் சட்டமன்றப் பேரவைத் தேர்தல் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்கள், சென்னை மாநகராட்சி மன்றம், நகராட்சி மன்றங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் தேர்தல்களுக்காகப் பின்பற்றப்படுகின்றன. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்கீழ் சட்டமன்ற வாக்காளர் பட்டியல்களை ஆண்டுதோறும் திருத்தும்படி 1966-ம் ஆண்டு வரையில் செயலில் இருந்ததால் உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்காக நாளது தேதி வரையில் தயாரித்துள்ள வாக்காளர் பட்டியல்கள் எப்போதும் கிடைத்தன. 1950-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21-வது பிரிவு, 1966-ம் ஆண்டு 47-ம் எண் மத்தியச் சட்டத்தால் திருத்தப்பட்டுள்ளது. திருத்த விதித்துறையின்படி, வாக்காளர் பட்டியல்

---

* 18—3—1968 தேசிய தமிழக சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.